மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஆட்சித் தலைவரால் நியமனம் செய்யப்படுகிற ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் போன்றவர்களால் அமைக்கப்பட்ட குழு மூலமாக ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பது தொடர்பாகப் பரிந்துரை செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்படுமேயானால், அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பன்னீர்செல்வம், நீங்கள் கேட்கிற கேள்விக்கும் அமைச்சர் சொன்ன பதில்தான் பொருந்தும். அதைத்தான் சொல்லப் போகிறார் மறுபடியும். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சட்டமன்றத் தொகுதியில் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் பெருமத்தூர் ஊராட்சி கடந்தகால தி.மு.க. ஆட்சியில் பிரிக்கப்பட்டு, உருவாக்கப்பட்டு, அதற்குத் தனி அலுவலர் இதுவரை நியமனம் செய்யப்படவில்லை. காரணம், தேர்தல் நெருங்கியதால் அது முடியாமல் போய்விட்டது. இப்போது புதிய அரசு வந்துள்ள காரணத்தால், பெருமத்தூர் ஊராட்சிக்குத் தனி அலுவலர் நியமனம் செய்து, அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்ற கேள்வியை உங்கள் மூலமாகக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது தொடர்பாகச் சொல்கிறேன். ஊராட்சியாக இருந்தாலும், பேரூராட்சியாக இருந்தாலும், தேர்தல் நடந்து முடிந்ததற்குப் பிறகு, தனி அலுவலர்கள் பொறுப்பு வகிக்கமாட்டார்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான் செயல்படுவார்கள். எனவே, இது தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால், அதற்குத் தக்க விடை அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 132, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

132—

சுரங்கப் பாதை

***6868—திரு. பி. கே. சேகர்பாபு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆர்.கே. நகர் பகுதியில் கொருக்குப்பேட்டை, தியாகப்பச்செட்டி தெரு, கத்திவாக்கம் நெடுஞ்சாலை, போஜராஜ நகர்—பென்சில் தொழிற்சாலை—கண்ணன் சாலை, மீனாம்பாள் நகர்—கத்திவாக்கம் நெடுஞ்சாலை ஆகிய இடங்களிலுள்ள இருப்புப் பாதை சந்திக் கடவில் சுரங்கப் பாதை அமைக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியில் சுரங்கப் பாதை அமைப்பது தொடர்பாக மாநகராட்சித் துறை அலுவலர்கள் மூலம் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆய்வுப் பணி தொடர்பான இறுதி அறிக்கை கிடைத்த பிறகு, சுரங்கப் பாதை அமைப்பது தொடர்பாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் கொருக்குப்பேட்டை தியாகப்பச்செட்டி தெரு, கத்திவாக்கம் நெடுஞ்சாலை இரயில்வே கடவிலும், போர்ஜராஜ நகர்—பென்சில் தொழிற்சாலை—கண்ணன் சாலை சந்திப்பு இரயில்வே கடவிலும், மீனாம்பாள் நகர்—கத்திவாக்கம் நெடுஞ்சாலை இரயில்வே கடவிலும் மேம்பாலமோ அல்லது சுரங்கப் பாதையோ அமைப்பது தொடர்பான கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது, ஆய்விலே இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். கடந்த 20-12-2001 அன்று, அந்தப் பகுதி மக்களுடைய தேவைகளை அறிவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களை நேரடியாக அந்தப் பகுதிக்கு அழைத்துச் சென்று, அந்தப் பகுதி மக்களின் 40 ஆண்டுகளுக்கு மேலான கோரிக்கையை அமைச்சர் அவர்களிடத்திலே அந்தப் பகுதி மக்கள் வலியுறுத்தியதற்குப் பிறகு, கடந்த 6-3-2002 அன்று சென்னை மாநகராட்சி மன்றத்தினுடைய

2002 ஏப்ரல் 12]

நிதிநிலை அறிக்கையிலே, நான் கேட்டிருக்கின்ற இந்த 3 இரயில்வே கடவுகளில், கொருக்குப்பேட்டை இரயில்வே கடவுப் பணிக்கு, முதல் கட்டமாக ரூபாய் 50 இலட்சமும், அதேபோன்று கத்திவாக்கம் நெடுஞ்சாலை—மீனாம்பாள் நகர் இரயில்வேக் கடவிற்கு ரூபாய் 50 இலட்சமும் ஒதுக்கியிருப்பதற்காக, தேவையற்ற இடங்களில் பாலங்களுக்குப் பதிலாக தேவையுள்ள டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் பகுதியில் பாலங்கள் அமைப்பதற்காக உத்தரவு பிறப்பித்திருக்கின்ற நாங்கள் வணங்கும் தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்ப் பகுதியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்தப் பணிகளுக்கு உண்டான அடிப்படை வேலைகள் எப்போது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் மூலமாக இறுதி அறிக்கை பெற்றதற்குப் பின்பு, சுரங்கப் பாதை அமைப்பது தொடர்பாக மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 133, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

133—

பண்ணைப் பராமரிப்பு

***4285—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, குடுமியான்மலையிலுள்ள அண்ணா பண்ணையில் பணிபுரியும் அதிகாரிகள் அங்குள்ள குடியிருப்புகளிலேயே தங்கி பண்ணையைச் சரியாகப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,